வணக்கம்
ஆகாஷ்வாணி – புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 09.09.2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் நிதி தொழில்நுட்பத்துறையின் வெற்றிப் பயணத்தில், மறுக்க முடியாத சாதனையாக, UPI எனப்படும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பணப்பரிவர்த்தனை திகழ்கிறது, என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இலங்கை அதிபர் திரு. அனுர குமார திச நாயகாவை இன்று கொழும்பில் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேசினார்.

தேசிய ஊட்டச்சத்து மாத விழிப்புணர்வு நிகழ்ச்சியை, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர், திருமதி அன்னபூர்ணா தேவி இன்று, உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி, தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

மோடி (20)

இந்தியாவின் நிதி தொழில்நுட்பத்துறையின் வெற்றிப் பயணத்தில், மறுக்க முடியாத சாதனையாக, UPI எனப்படும் இந்தியாவின்

ஒருங்கிணைந்த பணப்பரிவர்த்தனை திகழ்கிறது, என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். மும்பையில் நேற்று தொடங்கிய உலகளாவிய நிதி தொழில்நுட்ப விழா 2026-ஐ, தொடக்கி வைத்துப் பேசிய பிரதமர், நிதி தொழில்நுட்பம் குறித்த விவாதங்களில் UPI முக்கிய இடத்தை வகிக்கிறது என்றும், இது ஒரு மாபெரும் மாற்றம் எனவும் தெரிவித்தார். தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு தாம் அளித்து வரும் முன்னுரிமை குறித்து எடுத்துரைத்த பிரதமர், பாரம்பரிய வங்கி முறைகளால் புறக்கணிக்கப்பட்ட பகுதிகளிலும், வெற்றிகரமாக ஊடுருவி, நிதி தொடர்பான உன்னதமான சேவையை UPI செய்து வருவதாகவும் பாராட்டினார். சென்ற மாதத்தில் மட்டும் 24 பில்லியனுக்கும் அதிகமான UPI பரிவர்த்தனைகள் நடைபெற்றதாக தெரிவித்த அவர், UPI என்பது வெறும் தொழில்நுட்பக் கதை மட்டுமல்ல, அது ஒரு நாகரீகத்தின் கதை என்று French அதிபர் திரு. இமானுவேல் மேக்ரான் கூறியதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்தார். இந்தியாவின் முதன்மை டிஜிட்டல் பரிவர்த்தனையான UPI தற்பொழுது உலக அளவில் பரவத் தொடங்கியுள்ளதாக கூறினார். அந்த வகையில் தற்போது 11 நாடுகளில் அது செயல்பாட்டில் உள்ளதாகவும், ஒரு காலத்தில் கற்பனை செய்ய முடியாத ஒன்றாக இருந்ததாகவும், தற்போது அன்றாட எதார்த்தமாக மாறியுள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

ராஜ்நாத் சிங் -1 (08)

இலங்கைக்கு 3 நாள் பயணமாக, சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், அந்நாட்டு அதிபர் திரு. அனுர குமார திச நாயகாவை இன்று கொழும்பில் சந்தித்துப் பேசினார். அப்போது, கலாச்சார அடிப்படையில் நெருங்கிய அண்டை நாடுகளாகவும், கடல்சார் பங்காளிகளாகவும் உள்ள, இந்தியாவும் இலங்கையும், இருநாடுகளின் வளர்ச்சிக்காகவும், மக்களின் நலனுக்காகவும், ஒருங்கிணைந்து தொடர்ந்து செயல்படும் என்பதை இரு தலைவர்களும் மீண்டும் உறுதிப்படுத்தினர். இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு … (வாய்ஸ்)

ராஜ்நாத் சிங் – 2 வாய்ஸ் (18)

(வாய்ஸ்)

இலங்கை அதிபர் திரு. அனுர குமார திச நாயகா உடனான சந்திப்பின் போது, இருநாடுகளுக்கு இடையேயான, பாதுகாப்பு, அமைதி, மற்றும் செழிப்பை உறுதி செய்வதற்காக, இணைந்து செயல்படுவதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் இருவரும் வலியுறுத்தியதாக சமூக ஊடகப்பதிவு ஒன்றில் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். முன்னதாக, இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடிய திரு. ராஜ்நாத் சிங், இலங்கையிலுள்ள இந்திய சமூகத்தினர், இருநாடுகளுக்கும் இடையே பாலமாக திகழ்வதாகவும், இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவதில், அவர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்றும், தெரிவித்தார். உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் முக்கிய பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா திகழ்வதாக தெரிவித்த அவர், உலகளாவிய வளர்ச்சிக்கு இந்தியா 16 சதவிகிதத்திற்கு மேல் பங்களிப்பதாக கூறினார். கடந்த 12 ஆண்டுகளில் இந்தியா 38 நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது என்றும், இதில் 8 முக்கியமான நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இந்தியா-ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை, அனைத்து ஒப்பந்தங்களின் தாய் என்று குறிப்பிட்ட அவர்,

ராஜ்நாத் சிங் – 3 வாய்ஸ் (06)

இது இந்தியாவின் வளர்ந்து வரும் ராஜ தந்திர மற்றும் பொருளாதார திறன்களை பிரதிபலிக்கிறது என்றார். உலக நாடுகளுக்கு இந்தியாவின் மீது நம்பிக்கை அதிகரித்து வருவதற்கு காரணம், பிரதமர் திரு. நரேந்திர மோடியே என்று தெரிவித்த அவர், 12 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இன்று சர்வதேச அரங்கில் இந்தியா பேசும்பொழுது, உலகம் அதற்கு செவி சாய்க்கிறது என்றும் அவர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

## மத்திய அமைச்சரவை (10)

அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட 7 ரயில் பாதைகளை, 4 வழி ரயில் பாதையாக விரிவுபடுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் அமைச்சரவை கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த 7 வழித்தடங்களும், ரயில்வே போக்குவரத்தில் சுமார் 40 சதவிகிதம் என்றார். இதில் டெல்லி-மும்பை, மும்பை-சென்னை, சென்னை-கொல்கத்தா, கொல்கத்தா-டெல்லி வரையிலான ரயில்வே பாதை திட்டங்கள் அடங்கும்.

மேலும், 2 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு 4 வழி ரயில்வே பாதைகள் அமைக்கும் பணி ஏற்கனவே நிறைவடைந்து விட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

## தேசிய ஊட்டச்சத்து மாதம் (10)

தேசிய ஊட்டச்சத்து மாத விழிப்புணர்வு நிகழ்ச்சியை, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர், திருமதி அன்னபூர்ணா தேவி இன்று, உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் தொடக்கி வைத்தார். அப்போது உரையாற்றிய அவர், நாடு முழுவதும் உள்ள அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் மற்றும் பஞ்சாயத்து அமைப்புகளில் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்று தெரிவித்தார். "நமது அங்கன்வாடி மையங்கள் நமது பொறுப்பு" என்பதே இந்த ஆண்டிற்கான கருப்பொருள் என்று தெரிவித்த அவர், அங்கன்வாடி மையங்களில் ஊட்டச்சத்து மிக்க உணவுகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## பிஜேபி (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி பொது வாழ்வில் 25 ஆண்டுகள் நிறைவு செய்துள்ளதை கொண்டாடும் வகையில், இம்மாதம் 17ஆம் தேதி முதல், நாடு முழுவதும், சேவை இயக்கம் நடைபெறும் என்று பிஜேபி தேசிய தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில், இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், குஜராத் மாநில முதலமைச்சராக திரு. நரேந்திர மோடி கடந்த 2001ஆம் ஆண்டு

அக்டோபர் 7ஆம் தேதி பதவியேற்றதை சுட்டிக்காட்டிய அவர், பொதுச் சேவையில் 25 ஆண்டுகள் நிறைவடையும் தினமான வரும் அக்டோபர் 7ஆம் தேதி வரை இந்த சேவை இயக்கம் நடைபெறும் என்றார். இதில் ரத்த தான முகாம்கள், பேரணிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளதாகவும் திரு. நிதின் நபின் தெரிவித்தார்.

## தட்டாஞ்சாவடி இடைத்தேர்தல் (08)

புதுச்சேரி, தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியுள்ளது. இது குறித்து தேர்தல் நடத்தும் அதிகாரி, திரு. குலோத்துங்கன் செய்தியாளர்களிடம் பேசுகையில், வரும் 16ஆம் தேதி வரை, தட்டாஞ்சாவடியிலுள்ள தேர்தல் நடத்தும் அலுவலகத்தில், காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம் என்று தெரிவித்தார். வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இம்மாதம் 17ஆம் தேதி நடைபெறும் என்றும் 19ஆம் தேதி மனுக்களை திரும்பப்பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறினார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில்... (வாய்ஸ்)

## தட்டாஞ்சாவடி இடைத்தேர்தல் வாய்ஸ் (15)

(வாய்ஸ்)

## செல்லான் நாயக்கர் (09)

செவாலியே செல்லான் நாயக்கரின் பிறந்த நாள் இன்று புதுச்சேரி அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி, கடற்கரைச் சாலையிலுள்ள மேரி கட்டிட அரங்கில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு, ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. ராஜவேலு, குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. வி.பி. சிவக்கொழுந்து, சட்டமன்ற உறுப்பினர்கள், செந்தில் என்கிற ரமேஷ்,

டாக்டர் விக்னஷ்வரன் மற்றும் செவாலியே செல்லான் நாயக்கர் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

## ஜிப்மர் (15)

ஜிப்மர் கண் மருத்துவத் துறை சார்பில், 41ஆவது தேசிய கண்தான விழிப்புணர்வு இருவார விழாவின் நிறைவு விழா, இன்று நடைபெற்றது. இதில், ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் சாகா வினோத் குமார் கலந்து கொண்டு, கண்தானம் செய்த குடும்பத்தினரின் விலைமதிப்பற்ற பங்களிப்பை பாராட்டி அவர்களுக்கு மரியாதை செய்தார். அப்போது உரையாற்றிய அவர், இந்தியாவில் கருவிழி பார்வையின்மை என்பது ஒரு குறிப்பிடத்தக்க பொது சுகாதார பிரச்சனை உள்ள நிலையில், கருவிழியின் தேவை அதிகமாக இருப்பதாகவும், ஆனால் தானமாக கிடைக்கும் கருவிழியின் அளவு குறைவாகவே உள்ளது என்றும் தெரிவித்தார். எனவே, கருவிழி தானம் செய்ய மக்கள் ஆர்வமுடன் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இவ்விழாவில் ஜிப்மர் கண் மருத்துவத்துறையின் தலைவர் மற்றும் ஜிப்மர் கண் வங்கி இயக்குநர் டாக்டர் ரமேஷ் பாபு, பேராசிரியர் டாக்டர் சுபாஷினி கலியபெருமாள், மருத்துவ மாணவர்கள், கண்தானம் செய்தவர்களின் குடும்பத்தினர், பொதுமக்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

## வானிலை (09)

தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், அடுத்த 2 நாட்களுக்கு இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, வரும் 13ஆம் தேதி வரை உள் தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது என்றும், கடலோர தமிழகம், புதுச்சேரி, மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## இடைத் தேர்தல் (12)

தமிழகம், புதுச்சேரி மற்றும் மேற்கு வங்கத்திலுள்ள 5 சட்டப்பேரவை தொகுதிகளில் அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது. வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய இம்மாதம் 16ஆம் தேதி கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த நாள் மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும். வேட்பு மனுக்களை திரும்ப பெறுவதற்கு இம்மாதம் 19ஆம் தேதி கடைசி நாளாகும். தமிழகத்தில் மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளிலும், புதுச்சேரியில் தட்டாஞ்சாவடி தொகுதியிலும், மேற்கு வங்கத்தில் ரெஜி நகர் மற்றும் நந்திகிராம் தொகுதிகளிலும் சட்டப்பேரவைக்கான இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது. மேலும், அஸ்ஸாமில் Nagaon நாடாளுமன்ற தொகுதி இடைத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கலும் இன்று தொடங்கியுள்ளது.

## ஆசிய விளையாட்டுப் போட்டி (13)

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்காக 503 பேர் கொண்ட இந்திய குழுவினர், ஜப்பான் புறப்பட்டுச் சென்றுள்ளனர். புதுடெல்லி விமான நிலையத்தில் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பி.டி. உஷா உள்ளிட்டோர் நேற்று அவர்களை வழியனுப்பி வைத்தனர். முன்னதாக, இந்திய அணியினருக்கான அதிகாரப்பூர்வ ஜெர்ஸி அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது பேசிய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்கள் வாய்ப்புகளை சாதனைகளாக மாற்றுவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார். உலக அளவில் நமது வீரர்கள் சாதனை படைப்பதற்கு ஏற்ற சூழலை, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு ஏற்படுத்தி கொடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் நிதி தொழில்நுட்பத்துறையின் வெற்றிப் பயணத்தில், மறுக்க முடியாத சாதனையாக, UPI எனப்படும் இந்தியாவின்

ஒருங்கிணைந்த பணப்பரிவர்த்தனை திகழ்கிறது, என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இலங்கை அதிபர் திரு. அனுர குமார திச நாயகாவை இன்று கொழும்பில் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேசினார்.

தேசிய ஊட்டச்சத்து மாத விழிப்புணர்வு நிகழ்ச்சியை, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர், திருமதி அன்னபூர்ணா தேவி இன்று, உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி, தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

இத்துடன் இந்தச் செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. BI/MS/VM